பிப்ரவரி 2020

விண்மீன்.காம்

# நான்காவது வார நடப்பு நிகழ்வுகள்

22 பிப்ரவரி – 29 பிப்ரவரி

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

### 1. "தொற்றுப்பத்திரங்கள்" எந்த பன்முக மேம்பாட்டு வங்கியால் வழங்கப்படுகின்றன?

**அ. உலக வங்கி ☑**

ஆ. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி

இ. ஐரோப்பிய முதலீட்டு வங்கி

ஈ. ஆசிய வளர்ச்சி வங்கி

PEF
PANDEMIC EMERGENCY FINANCING FACILITY

- ❖ சியரா லியோன், கினியா மற்றும் லைபீரியாவில் 2013–2016ஆம் ஆண்டு வரை எபோலா வைரஸ் பாதித்ததற்கு பதிலளிக்கும் விதமாக, "Pandemic Bonds" என்னும் பத்திரங்களை உலக வங்கி அதன் 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தொற்று அவசர நிதியத்தின்கீழ் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ உலக வங்கியின் சர்வதேச புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியால் வழங்கப்பட்ட இப்பத்திரங்கள் பல்வேறு தொற்று நோய்களால் தொற்று ஏற்பட்டால், முதலீட்டாளர்களுக்கு சில அல்லது அனைத்து நிதியையும் கைவிடவேண்டிய நிலைக்குத் தள்ளாமல் அதற்கீடாக அதிக சலுகைகளை வழங்குகிறது.

### 2.நியாண்டர்தால் எஞ்சியுள்ள இடமான ஷானிதார் குகை, அமைந்துள்ள நாடு எது?

அ. சிரியா

**ஆ. ஈராக் ☑**

இ. தஜிகிஸ்தான்

ஈ. எகிப்து



- ❖ ஈராக்கின் குர்திஸ்தானில் அமைந்துள்ள ஜாக்ரோஸ் மலைகளில் ஷானிதார் குகை அமைந்துள்ளது. 1950களில் ஷானிதர் குகை தோண்டப்பட்டபோது, தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ரால்ப் சோலெக்கி பத்து நியாண்டர்தால் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் மீதங்களைக் கண்டறிந்தார். அதிலிருந்த ஓர் எலும்புக்கூடைச்சுற்றி பண்டைய பூங்கொத்துகளின் எச்சங்களும் இருந்தன.
- ❖ இது, நியாண்டர்தால்கள், இறந்தவர்களை அடக்கஞ்செய்து, 'மலரஞ்சலி' செய்து இறுதிச்சடங்குகளை நடத்தியிருக்கலாம் எனச் சோலெக்கி கருதினார்.

### 3.அலைபேசிகள் மற்றும் மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் லித்தியம் அயன் மின்கலங்களில் எதிர்மின்வாயாக பயன்படுத்தப்படும் கோபால்ட், எந்நாட்டிலிருந்து அதிகமாக வெட்டியெடுக்கப்படுகிறது?

அ. சீனா

ஆ. கஜகஸ்தான்

இ. சூடான்

**ஈ. காங்கோ குடியரசு ☑**



- ❖ அலைபேசிகள் மட்டுமல்லாமல், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும் மின்சார வாகனங்களுக்கும் கோபால்ட் ஒரு முக்கியமான தேவையாக உள்ளது. வெட்டியெடுக்கப்படும் கோபால்ட்டில் சுமார் 60%

காங்கோ குடியரசிலிருந்தே பெறப்படுகிறது. காங்கோ குடியரசின் அரசியல் சூழல் காரணமாக அதன் தொடர்ச்சியான கிடைப்புத்தன்மை ஒரு பிரச்சனையாகி வருகிறது.

**4.இந்தியாவில், தற்போதுள்ள (2020) தொலைத்தொடர்பு நிறுவனங்களின் எண்ணிக்கை?**

அ. 10

ஆ. 8

இ. 6

ஈ. 4 ☑

❖ அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு நிறுவனமான பாரத் சஞ்சார் நிகம் லிட் உட்பட, இந்தியாவில் உள்ள தொலைத்தொடர்பு நிறுவனங்களின் எண்ணிக்கை, 2016இல் இருந்த ஒன்பது என்ற எண்ணி–க்கையிலிருந்து, தற்போது 2020இல் நான்காகக் குறைந்துள்ளது.

❖ அலைபேசி சேவைகளின் நுகர்வு மாதத்துக்கு ஒரு பயனருக்கு 366 நிமிடங்களிலிருந்து 691 ஆக 88% அளவுக்கு அதிகரித்துள்ள நிலையில், தரவு நுகர்வு 0.5 GBஇலிருந்து 2016 மற்றும் 2019க்கு இடையில் கிட்டத்தட்ட 11 GB அளவுக்கு அதிகரித்துள்ளது என இந்தியாவின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**5.உலகின் மிகப்பெரிய பனையெண்ணை இறக்குமதியாளராக உள்ள நாடு எது?**

**அ. இந்தியா ☑**

ஆ. சீனா

இ. இரஷ்யா

ஈ. சவுதி அரேபியா



❖ 2020ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகின் மிகப்பெரிய பனையெண்ணை இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா உள்ளது. கடந்த அக்.31ஆம் தேதியுடன் முடிவடைந்த சந்தைப்படுத்தல் ஆண்டில், இந்தியா, 9.4 மில்லியன் டன் பனையெண்ணையை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதில், 2.72 மில்லியன் டன் சுத்திகரிக்கப்பட்ட பனையெண்ணை அடங்கும்.

❖ இந்தியாவின் மொத்த சமையல் எண்ணெ பயன்பாட்டில் 2/3 பங்கு பனையெண்ணையாக உள்ளது. இந்தோனேசியா மற்றும் மலேசியாவிலிருந்து பனையெண்ணை இறக்குமதி செய்யப்படுகிறது. அவை, முறையே உலகின் முதல் & இரண்டாவது பனையெண்ணை பெரிய உற்பத்தியாளராக உள்ளன.

**6.தற்போது, இந்தியாவில் எத்தனையாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடந்துவருகிறது?**

அ. ஐந்தாவது

ஆ. ஆறாவது

**இ. ஏழாவது ☑**

ஈ. எட்டாவது

❖ 7ஆவது பொருளாதார கணக்கெடுப்பை, மத்திய புள்ளிவிவர அமைச்சகம் & திட்ட அமலாக்கத்தின் மத்திய புள்ளிவிவர அலுவலகம் (பொருளாதார புள்ளிவிவர பிரிவு) நடத்திவருகிறது. வளரும் நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு நடைமுறைகளின்படி மற்றும் UNSD பரிந்துரைகளுக்கு ஏற்ப, நாடு தழுவிய இந்த வணிகப்பதிவை நடத்திவருகிறது.

❖ பொருளாதாரக் கட்டமைப்பைப்பற்றிய விரிவான பகுப்பாய்விற்காக அகில இந்திய, மாநிலம், மாவட்டம், சிற்றூர் மட்டங்களில் இது விரிவான தகவல்களை வழங்கும்.

**7.தேசிய மக்கள்தொகை பதிவேட்டின்படி, ஒரு நபர், கடந்த எத்தனை மாதங்கள் அல்லது ஆண்டுகளுக்கு ஓர் உள்ளூர் பகுதியில் வசித்துவந்தால், அவர், 'உள்ளூர்வாசி' எனக் கருதப்படுவடுவார்?**

**அ. ஆறு மாதங்கள் ☑**



ஆ. ஓராண்டு

இ. பதினெட்டு மாதங்கள்

ஈ. ஈராண்டுகள்

❖ தேசிய மக்கள்தொகை பதிவேடு (National Population Register) என்பது இந்தியாவில் குடியிருப்போர் தொடர்பான விவரங்களை பராமரிக்கும் பதிவேடாகும். தேசிய மக்கள்தொகை பதிவேட்டின்படி, ஒரு "வழக்கமான குடியிருப்பாளர்" என்பவர் ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறைந்தது ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வாழ்ந்த நபரையோ அல்லது அடுத்த ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ விரும்பும் நபரையோ குறிக்கிறது. இந்தியாவின் ஒவ்வொரு "வழக்கமான குடியிருப்பாளரும் – Usual Resident" இதில் பதிவு செய்வது கட்டாயமாகும்.

**8.தொழில்நுட்ப அமலாக்கத்தைச் சார்ந்த அமைச்சகங்கள், துறைகள் & பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கும் 12 உறுப்பினர்களைக்கொண்ட, "தொழினுட்பக்குழு"வுக்கு தலைமைதாங்குபவர் யார்?**

அ. Dr. R சிதம்பரம்



ஆ. ரிஷிகேஷ் நாராயணன்

**இ. Dr. K விஜய் ராகவன் ☑**

ஈ. பாஸ்கர் சஹா

❖ நடுவணரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரை தலைவராகக்கொண்ட பன்னிரண்டு உறுப்பினர் தொழில்நுட்பக்குழுவை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. நவீன தொழில் நுட்பங்கள், தொழில்நுட்ப வரைவு மற்றும் தொழில்நுட்ப உற்பத்திப் பொருட்கள், தேசிய பரிசோதனைக் கூடங்கள், அரசின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்புகளில் உருவாக்கப்பட்ட இரட்டை பயன்பாட்டு தொழில்நுட்பங்களை வணிகமயமாக்குதல் குறித்த கொள்கை ஆலோசனைகளை உடனுக்குடன் அளிக்க இந்தக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

❖ குறிப்பிட்ட முக்கிய தொழினுட்பங்களுக்கான திட்டத்தை உள்நாட்டிலேயே உருவாக்குதல், தொழினுட்ப மேம்பாட்டுக்கு உதவும் உரிய ஆராய்ச்சி & மேம்பாட்டுத்திட்டங்களை தேர்வு செய்தல் பணிகளையும் இக்குழு மேற்கொள்ளும்.


**9.உலகில் C வகை கல்லீரலழற்சிநோய் அதிக விகிதத்தில் பாதிக்கப்பட்டுள்ள நாடும் 2020ஆம் ஆண்டில் அந்நோயை ஒழிக்கும் என எதிர்பார்க்கப்படுகிற நாடும் எது?**

அ. சவுதி அரேபியா

ஆ. சீனா

**இ. எகிப்து ☑**

ஈ. இந்தியா




❖ எகிப்தில், 15–20% அளவுக்கு C வகை கல்லீரலழற்சிநோய் பாதிப்பு உள்ளது. இந்த நோய்க்கு எதிரான நாடுதழுவிய பரப்புரையை அடுத்து, எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் அந்நாடு இந்த C வகை கல்லீரலழற்சிநோய் நோயை ஒழிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**10.முதலீட்டு திட்டங்களுக்கான தொழிற்துறை உரிமங்களை, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்குவதை உறுதிசெய்யும், "காலவரையறைக்குட்பட்ட அனுமதிச்சட்டம் – Time-Bound Clearance Act" இயற்றுவதற்கான மசோதாவுக்கு ஒப்புதல் அளித்துள்ள மாநில அமைச்சரவை எது?**

அ. இராஜஸ்தான்

ஆ. ஹரியானா

**இ. மத்திய பிரதேசம் ☑**

ஈ. குஜராத்

❖ காலவரையறைக்குட்பட்ட அனுமதிச்சட்டத்தை இயற்றுவதற்கான வரைவு மசோதாவை ம.பிரதேச மாநில அமைச்சரவை அனுமதித்துள்ளது. இந்தச் சட்டம், முதலீட்டு திட்டங்களுக்கான தொழிற்துறை உரிமங்களை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்குவதை உறுதிசெய்யும். ஏறக்குறைய 10 மாநிலத்துறைகள் தொடர்பான சுமார் 40 அனுமதிகள் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வழங்கப்பட வேண்டும் என்பதே இந்தச் சட்டத்தின் நோக்கமாகும்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. WHO ஆணையம் மற்றும் UNICEF வெளியிட்டுள்ள 'சர்வதேச செழுமைக்குறியீட்டில்'* இந்தியாவின் தரநிலை என்ன? (*Global Flourishing Index)**



அ. 91

ஆ. 101

இ. 121

ஈ. 131 ☑

❖ "உலக குழந்தைகளுக்கான எதிர்காலம்" என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை அண்மையில் உலக நலவாழ்வு அமைப்பு (WHO) ஆணையம், UNICEF & லான்செட் இதழ் ஆகியவை இணைந்து வெளியிட்டன. குழந்தைகள் வாழத்தகுதியான இடம் மற்றும் நலவாழ்வுக்காக ஒரு நாட்டால் மேற்கொ–ள்ளப்பட்ட முயற்சிகளின் அடிப்படையில் அவற்றை ஒப்பிடும் புதிய, "சர்வதேச செழுமைக்குறியீடு" ஒன்றும் இந்த அறிக்கையின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

❖ மதிப்பிடப்பட்ட மொத்த 180 நாடுகளில், இந்தியா, செழுமைக்குறியீட்டில் 131ஆவது இடத்திலும், நிலைத்–திருக்கும் தன்மைக்கான குறியீட்டில் 77ஆவது இடத்திலும் உள்ளது.

**2. தேஜ் திட்டத்தைத்* தொடங்கியுள்ள இந்திய மாநிலம் எது? (*Project Tej)**



அ. ஆந்திர பிரதேசம்

ஆ. ஒடிசா

**இ. தெலுங்கானா ☑**

ஈ. உத்தர பிரதேசம்

❖ Bio Asia 2020 – உயிரி தொழில்நுட்பம் மற்றும் வாழ்க்கை அறிவியல் மாநாட்டின்போது, 'MedTech Connect' என்ற தளத்துடன் இணைந்து தெலுங்கானா அரசு தேஜ் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டம், மருத்துவ தொழில்நுட்பத்துறைசார்ந்த தொழில்முனைவோர்கள் தங்கள் கருத்து மாதிரி–களைச் பரிசோதிக்க உதவும் ஒரு தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

❖ ஹைதராபாத்தில் உள்ள மாநில ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு அமைப்பு மற்றும் MedTech Connect ஆகியவை, இதுதொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான Cyient மற்றும் Xynteoஇன், "இந்தியா 2022 கூட்டணி" என்னும் வணிகக்கூட்டணியின்கீழ் MedTech Connect தளம் நிறுவப்பட்டது.

**3.வருடாந்திர, "இயற்கைத்தரவரிசை குறியீடு–2020"இன்படி, நாட்டிலேயே முதலிடத்திலுள்ள இந்திய நிறுவனம் எது?**

அ. இந்திய அறிவியல் நிறுவனம் (IISc)

**ஆ. அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகம் (CSIR) ☑**

இ. டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (TIFR – மும்பை)

ஈ. ஹோமி பாபா தேசிய நிறுவனம் (HBNI)

❖ நிறுவனங்கள் மேற்கொண்டமொத்த ஆராய்ச்சியை அடிப்படையாகக்கொண்ட, "Nature Ranking Index –2020"இன்படி, அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக்கழகம் (CSIR) நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. 2018 டிசம்பர் முதல் 2019 நவம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில், நிறுவனங்களுக்கு தரநிலை வழங்கப்பட்டுள்ளது.

❖ பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (IISc), இந்தக்குறியீட்டில் இரண்டாவது இடத்தையும், டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (TIFR–மும்பை) மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

**4.மிசோரம் & அருணாச்சல பிரதேசத்திற்கு, 'இந்திய மாநிலத்தகுதி' வழங்கப்பட்ட ஆண்டு எது?**

அ. 1972

ஆ. 1949

**இ. 1987 ☑**

ஈ. 2001




❖ இரண்டு வடகிழக்கு மாநிலங்களான மிசோரமும் அருணாச்சல பிரதேசமும் கடந்த பிப்ரவரி 20 அன்று தங்களது, 'மாநில உதய தின'த்தைக் கொண்டாடின. கடந்த 1987ஆம் ஆண்டில் இதேநாளில், இரு மாநிலங்களுக்கும், 'இந்திய மாநிலம்' என்னும் தகுதி வழங்கப்பட்டது.

❖ கடந்த 1972 வரை மிசோரம், அஸ்ஸாம் மாநிலத்தின் ஒருபகுதியாக இருந்தது. இது ஒரு தனி யூனியன் பிரதேசமாக 1987ஆம் ஆண்டிலேயே மாற்றப்பட்டது. பின்னர், பிப்ரவரி 20, 1987 அன்று இந்தியாவின் 23ஆவது மாநிலமாக உருவானது. வடகிழக்கு எல்லைப்புற முகமைக்கு அருணாச்சல பிரதேசம் எனப் பெயரிட்டு, கடந்த 1972இல் ஒரு யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது. பின்னர், 1987ஆம் ஆண்டில் ஒரு மாநிலமாக உருவாக்கப்பட்டது.

**5.நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019இன் பின்னணியில் உள்ள, 'CCPA' எதைக் குறிக்கிறது?**

அ. Common Consumer Protection Agency

**ஆ. Central Consumer Protection Authority ☑**

இ. Company Consumer Protection Authority

ஈ. Centralised Consumer Protection Affairs




❖ நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், 2019ஐ அமல்படுத்துவதற்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்படும் என உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் அறிவித்துள்ளார். இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்திற்குள் இவ்வாணையம் நிறுவப்படும்.

❖ நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் ஏமாற்று விளம்பரங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்துடன் பணியாற்றும் புலனாய்வுப்பிரிவு ஒன்று அமைக்கப்படும் என்றும்

அமைச்சர் அறிவித்துள்ளார். கடந்த 1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச்சட்டத்தை மாற்றியமைத்த "நுகர்வோர் பாதுகாப்பு மசோதா, 2019"க்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**6. 2019ஆம் ஆண்டின் எர்ன்ஸ்ட் & யங் (EY) தொழில்முனைவோராக அறிவிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. ஆதி கோத்ரேஜ்

ஆ. உதய் கோடக்

**இ. கிரண் மஜும்தார் ஷா ☑**

ஈ. ஸ்ரீதர் வேம்பு



❖ கடந்த 2019ஆம் ஆண்டுக்கான எர்ன்ஸ்ட் & யங் (EY) விருதுகளின் 21ஆவது பதிப்பு அண்மையில் வழங்கப்பட்டது. இந்தியாவின் முன்னணி உயிரி மருந்துகள் நிறுவனமான Biocon'இன் நிறுவனரும் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருமான கிரண் மஜும்தார் ஷா, "2019ஆம் ஆண்டின் EY தொழில்முனைவோராக தேர்வுசெய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளார்.

❖ வரும் ஜூன் மாதத்தின்போது மான்டே கார்லோவில் நடைபெறவுள்ள EY உலக தொழில்முனைவோர் விருதுகள் வழங்கும் விழாவில் அவர் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளார். கோத்ரேஜ் குழுமத் தலைவர் ஆதி கோத்ரேஜுக்கு, "வாழ்நாள் சாதனையாளர் விருது" அறிவிக்கப்பட்டுள்ளது. 'Blackstone' இந்தியாவின் துகின் பாரிக், "ஆண்டின் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்திய நபர்" விருதைப்பெற்றவராவார்.

**7. "இந்திய ஜவுளி மற்றும் கைவினைகளுக்கான வளர்ந்துவரும் வாய்ப்புகள்" குறித்த கருத்தரங்கத்தை நடத்திய நகரம் எது?**

அ. வாரணாசி

ஆ. லக்னோ

**இ. புது தில்லி ☑**

ஈ. ஹைதராபாத்



❖ "இந்திய ஜவுளி மற்றும் கைவினைகளுக்கான வளர்ந்துவரும் வாய்ப்புகள்" குறித்த கருத்தரங்கம் அண்மையில் புது தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக்கருத்தரங்கை, மத்திய ஜவுளி & பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி ஜூபின் இரானி திறந்துவைத்தார். இந்தத் தேசிய கருத்தரங்கத்தில், மத்திய வர்த்தகம் & தொழிற்துறை மற்றும் மத்திய ஜவுளி அமைச்சகத்தின் அதிகாரிகள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**8. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, "ESPNஇன் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை" விருதை வெல்லும் இந்திய விளையாட்டு வீராங்கனை யார்?**

அ. மேரி கோம்

**ஆ. PV சிந்து ☑**

இ. சாய்னா நேவால்

ஈ. சானியா மிர்சா



- இந்திய வீராங்கனையும் உலக சாம்பியனுமான P V சிந்து, தொடர்ந்து 3ஆவது முறையாக ESPN'இன் "ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை" விருதை வென்றுள்ளார். P V சிந்துவின் உலக சாம்பியன்ஷிப் வெற்றியும், "ஆண்டின் சிறந்த தருணம்" எனத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ESPN'இன், "ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்" விருதை சௌரப் சௌத்ரி பெற்றுள்ளார்.

- தலைமை தேசிய பூப்பந்து பயிற்சியாளர் புல்லேலா கோபிசந்த், "ஆண்டின் சிறந்த பயிற்சியாளராக" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மானு பாக்கர்–சௌரப் சௌத்ரி அணி, "ஆண்டின் சிறந்த அணி"க்கான கௌரவத்தைப் பெற்றுள்ளது.

**9.குடிமக்களை நோக்கிய சேவையை வழங்குவதில் சிறந்து விளங்கியதற்காக, இந்திய இரயில்வேயின் எந்த வலைத்தளம், தேசிய மின்னாளுகையின், 'வெள்ளி' விருதை வென்றுள்ளது?**

அ. வேர் இஸ் மை டிரெயின்

ஆ. இரயில் சுவிதா

**இ. இரயில் மதத் ☑**

ஈ. இரயில் சாரதி

- இந்திய இரயில்வேயின் பயணிகள் குறைதீர் வலைத்தளமான இரயில்மதத், குடிமக்களை நோக்கிய சேவைகளை வழங்குவதில் சிறந்து விளங்கியதற்காக தேசிய மின்னாளுகை விருதை வென்றுள்ளது. குறைகளைக் கூறுதல், விசாரித்தல் மற்றும் உதவிக்கு பயன்படுத்தப்படும் இந்திய இரயில்வேயின் இப் புதிய ஒருங்கிணைந்த தளத்துக்கு, தேசிய மின்னாளுகை விருதுகளின் இரண்டாம் பிரிவின்கீழ், 'வெள்ளி' விருது வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக சீர்திருத்தங்கள் & பொதுமக்கள் குறைதீர் துறையானது ஆண்டுதோறும் தேசிய மின்னாளுகை விருதுகளை வழங்கிவருகிறது.

**10. NITI ஆயோக்கின், "நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) மாநாடு–2020"ஐ நடத்திய நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. கௌகாத்தி ☑**

இ. கொல்கத்தா

ஈ. ஷில்லாங்

- NITI ஆயோக், அண்மையில், அஸ்ஸாம் மாநிலம் கௌகாத்தியில், "நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த கூட்டம் – 2020: கூட்டாண்மை, ஒத்துழைப்பு மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி"யை ஏற்பாடுசெய்தது. வடகிழக்கு கவுன்சில், அஸ்ஸாம் மாநில அரசு, டாடா அறக்கட்டளை, ஐ.நா வளர்ச்சித் திட்டம் (UNDP) மற்றும் வளரும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவலமைப்பு (RIS) ஆகியவற்றுடன் இணைந்து இம்மாநாடு ஏற்பாடுசெய்யப்பட்டது. 3 நாள் நீளும் இந்நிகழ்வு, பிப்.24 அன்று தொடங்கியது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையத்தின் (TNUSRB) தலைவராக சுனில்குமார், DGP நியமி–க்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்காவின் தேசிய விண்வெளி ஆய்வுமையத்துக்குச் (NASA) செல்லும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிக்கு தமிழ்நாட்டரசின் சார்பில் ₹2 இலட்சம் பணவுதவியை வழங்க முதலமைச்சர் பழனிசாமி ஆணையிட்டுள்ளார்.
- தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே வீரபாண்டியபட்டணத்தில் அமைக்கப்பட்டுள்ள, 'பத்மஸ்ரீ' Dr பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபத்தை முதலமைச்சர் பழனிசாமி திறந்துவைத்தார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** ***Vellbergia bartholomaei*** **எந்த இனத்தைச் சார்ந்ததாகும்?**

அ. தவளை

**ஆ. பல்லி ☑**

இ. சிலந்தி

ஈ. பாம்பு



❖ ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் மேற்கொண்ட ஆய்வின்படி, ஒரு புதிய வரலாற்றுக்கு முந்தைய ஊர்வன இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது, தற்கால பல்லி மற்றும் பாம்பினங்களுக்கு மூதாதையர் எனக்கூறப்படுகிறது. '*Vellbergia bartholomaei*' என இந்தப் பழங்கால பல்லியினம் அழைக்கப்படுகிறது. இந்தக்கண்டுபிடிப்பு, நான்கு கால் உயிரினங்கள் குறித்த பல்வேறு தகவல்களை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**2.அண்மையில் பதவி விலகிய லியோ வரட்கர், எந்த நாட்டின் பிரதமராக இருந்தார்?**

அ. பிரான்ஸ்

**ஆ. அயர்லாந்து ☑**

இ. நெதர்லாந்து

ஈ. கிரீஸ்



❖ அயர்லாந்தின் பிரதமர் லியோ வரட்கர், அண்மையில் தனது பிரதமர் என்று பொருள்படும், 'தாவோசீச்' பதவியை ராஜிநாமா செய்தார். அவர் தனது இராஜிநாமாவை, ஐரிஷ் அதிபர் மைக்கேல் ஹிக்கின்ஸிடம் சமர்ப்பித்த போதிலும், தொடர்ந்து இடைக்காலத்தலைவராக பதவியிலிருப்பார். அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பின்படி, 'தாவோசீச்' மற்றும் பிற அரசாங்கப் பதவிகளுக்கு பிறிதொரு நபர் நியமிக்கப்படும் வரை, ஏற்கனவே பதவியிலிருக்கும் அந்நபரே தொடர்ந்து அந்தக்கடமைகளைச் செய்திடவேண்டும்.

**3.தாய்மங்கூர் மீன்களின் இனப்பெருக்க மையங்களை அழிக்க உத்தரவிட்ட மாநில அரசு எது?**

அ. ஒடிசா

ஆ. மேற்கு வங்கம்

இ. அஸ்ஸாம்

**ஈ. மகாராஷ்டிரா ☑**



❖ நன்னீர் மங்கூர் போன்ற தோற்றத்தைக்கொண்ட தாய்மங்கூர் மீன், மாநிலத்தில் மிகவும் சுகாதாரமற்ற நிலையில் வளர்க்கப்படுகிறது. இதன் நுகர்வின் காரணமாக மக்களுக்கு நோய் ஏற்படுகிறது. எனவே, தாய்மங்கூர் மீன்களின் இனப்பெருக்க மையங்களை அழிப்பதற்கு மகாராஷ்டிரா மாநில அரசு சிறப்பு முயற்சியை மேற்கொண்டுள்ளது. மீன் விற்பனைக்கு தடைவிதிக்க, மாநில மீன்வளத்துறை தலைவர் உத்தரவிட்டுள்ளார். இதற்கு முன்னர், கடந்த 2000ஆம் ஆண்டில் இவ்வகை மீனினங்களை விற்பனை செய்வதற்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

**4.அடல் கிசான் – மஜ்தூர் சிற்றுண்டிச்சாலைகள் திட்டம் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. உத்தரபிரதேசம்

**ஆ. ஹரியானா ☑**

இ. உத்தரகண்ட்

ஈ. மத்தியப் பிரதேசம்



❖ ஹரியானா மாநில சட்டமன்றத்தின் பட்ஜெட் அமர்வின்போது, ஹரியானா அரசு, அடல் கிசான்–மஜ்தூர் சிற்றுண்டிச்சாலைகளை மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து சந்தைகள் & சர்க்கரை ஆலைகளிலும் திறக்கும் என அம்மாநில ஆளுநர் அறிவித்தார். வேளாண் பெருமக்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 10 ரூபாய்க்கு மலிவு விலையில் உணவு வழங்குவதற்காக இந்தச் சிற்றுண்டிச்சாலைகள் அமைக்கப்பட உள்ளன. இதுபோன்ற 25 சிற்றுண்டிச்சாலைகள் மாநிலம் முழுவதும் நிறுவப்படவுள்ளன.


**5.ஷியாமா பிரசாத் முகர்ஜி ரூபன் திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

**ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. பணியாளர்கள், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம்



❖ ஷியாமா பிரசாத் முகர்ஜி ரூபன் திட்டம் தொடங்கப்பட்ட நான்காவது ஆண்டுவிழா பிப்ரவரி 21 அன்று அனுசரிக்கப்பட்டது. கடந்த 2016ஆம் ஆண்டில், பிரதமர் மோடி ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ், இதே தேதியில் இத்திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இதன்கீழ், உள்ளூர் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக நன்கு திட்டமிடப்பட்ட ரூபன் தொகுதிகள் உருவாக்கப்படுகின்றன.

**6. 'வியூ பாயிண்ட்ஸ் – Viewpoints' என்பது எந்தப் பெரிய தொழில்நுட்ப நிறுவனத்தின் செயலியாகும்?**

அ. கூகிள்

ஆ. அமேசான்

**இ. பேஸ்புக் ☑**

ஈ. ஆப்பிள்

FACEBOOK VIEWPOINTS

❖ 'Viewpoints' என்பது பேஸ்புக் நிறுவனத்தின் சந்தை ஆராய்ச்சி பயன்பாடு ஆகும். கருத்துக்கணிப்புகள், பணிகள் மற்றும் தயாரிப்பு–சோதனைகளில் பங்கேற்க பயனரை இது கேட்டுக்கொள்கிறது. பேஸ்புக் நிறுவனத்தின் பேச்சு–அங்கீகார தொழினுட்பத்தை மேம்படுத்துவதற்காக, தங்கள் குரலைப்பதிவுசெய்ய ஒப்புக்கொள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனர்களின் குழுவிற்கு நிதிரீதியாக வெகுமதி அளிப்பதாக இந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தப்பயன்பாட்டில், 'உச்சரிப்பு' என்ற புதிய நிரலைப்பயன்படுத்தி பயனர்கள் ஒலியைப் பதிவுசெய்யவேண்டும்.

**7.அண்மையில் எந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில், 'தேசிய இயற்கை உணவுத் திருவிழா' நடைபெற்றது?**

அ. இலட்சத்தீவுகள்

ஆ. அஸ்ஸாம்

இ. மகாராஷ்டிரா

**ஈ. புது தில்லி ☑**




❖ மத்திய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் பதல் மற்றும் பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி ஆகியோரால், அண்மையில், புது தில்லியில் 'தேசிய இயற்கை உணவுத்திருவிழா' திறந்துவைக்கப்பட்டது.

❖ "Unleashing India's Organic Market Potential" என்பது இந்தத் திருவிழாவின் கருப்பொருளாகும். நாடு முழுவதுமுள்ள நூற்றுக்கணக்கான பெண் தொழில்முனைவோர் மற்றும் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்தோர், இந்த 3 நாள் திருவிழாவில், தங்களது இயற்கைத் தயாரிப்புகளை வெளிப்படுத்துகின்றன.

**8.இந்திய வம்சாவளி தோட்டத்தொழிலாளர்களுக்காக, பெருந்தோட்டப்பள்ளிகளை மேம்படுத்தும் நோக்கி –ல், எந்த நாட்டிற்கு மானியம் வழங்க இந்தியா தயாராகவுள்ளது?**

அ. வங்கதேசம்

**ஆ. இலங்கை ☑**

இ. நேபாளம்

ஈ. லாவோஸ்



❖ இந்திய வம்சாவளி தோட்டத்தொழிலாளர்களுக்கான பெருத்தோட்டப்பள்ளிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன. கொழும்பில் கையெழுத்தான இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், ஒன்பது தோட்டப்பள்ளிகளின் உட் கட்டமைப்பு, இந்தியாவால் வழங்கப்படும் ₹30 கோடி நிதியுதவியுடன் தரப்படுத்தப்படவுள்ளது. இந்திய மானியத்துடன், பல பள்ளி கட்டிடங்களில் புனரமைப்புப்பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**9. 'தல் சேனா பவன்' கட்டப்படவுள்ள மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?**

அ. லடாக்

ஆ. ஜம்மு – காஷ்மீர்

**இ. புது தில்லி ☑**

ஈ. சண்டிகர்



❖ இந்தியாவின் புதிய இராணுவ தலைமையகத்துக்கு, 'தல் சேனா பவன்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. சமீபத்தில், தில்லி கன்டோன்மென்ட்டில், இந்தப்புதிய தலைமையகத்திற்கான அடிக்கல்லை பாதுகாப்பு அமைச்சர் நாட்டினார். இப்புதிய இராணுவ தலைமையகம் 39 ஏக்கர் பரப்பளவில் கட்டப்படவுள்ளது.

❖ இதில், புதிதாக உருவாக்கப்பட்ட பாதுகாப்புத் தலைமைத் தளபதி அலுவலகமும் அமைக்கப்படும். ஐந்து ஆண்டுகளில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ள இப்பலமாடிக்கட்டட வளாகத்தில் அனைத்து இராணுவ அலுவலகங்களும் இருக்கும்.

**10.எம்மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், இந்தியாவின் முதல் மிதக்கும் படகுத்துறை திறக்கப்பட்டுள்ளது?**




அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. கோவா ☑**

இ. மும்பை

ஈ. குஜராத்

❖ இந்தியாவின் முதல் மிதக்கும் படகுத்துறையானது கோவா மாநிலம் பனாஜியில் பாயும் மாண்டவி ஆற்றின்கரையில் திறக்கப்பட்டுள்ளது. இந்தப் படகுத்துறையானது, மாநில துறைமுகத்துறையின் வளாகத்தில் அமைந்துள்ளது. சிமெண்ட் கான்கிரீட்டால் ஆன இந்தப் படகுத்துறை, குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மர்மகோவா துறைமுகத்தில் அமைந்துள்ள பயண முனையம் மற்றும் குடிவரவு வசதியுடன் கூடிய இந்தப் படகுத்துறையை, மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் மன்சுக் மாண்டவியா திறந்துவைத்தார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. பிப்ரவரி, 2020 நிலவரப்படி, இந்தியாவின் சிறந்த வர்த்தக பங்காளர் (trade partner) நாடு எது?**

அ. சீனா

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. இரஷ்யா

ஈ. பிரான்ஸ்



❖ இந்தியாவின் சிறந்த வர்த்தக பங்காளராக, அமெரிக்கா, சீனாவை விஞ்சியுள்ளது. வர்த்தக அமைச்சக தரவுகளின்படி, 2018–19 நிதியாண்டில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் கிட்டத்தட்ட $88 பில்லியன் டாலர்களாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில், சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகம் $87.1 பில்லியன் டாலராக இருந்தது.

❖ இதேபோல், 2019–20ஆம் ஆண்டு ஏப்ரல் – டிசம்பர் மாதங்களில், அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் $68 பில்லியன் டாலர்களாக இருந்தது. அதே காலகட்டத்தில், சீனாவுடனான வர்த்தகம் $65 பில்லியன் டாலராக இருந்தது. இந்தியாவில் மிகைவர்த்தகம் புரியும் சில நாடுகளுள் அமெரிக்காவும் ஒன்றாகும். மறுபுறம், சீனாவுடன் மிகப்பெரிய வர்த்தக பற்றாக்குறையை இந்தியா கொண்டுள்ளது.

❖ 2018–19இல், இந்தியா, அமெரிக்காவுடன் $16.9 பில்லியன் டாலர் அளவுக்கு மிகை வர்த்தகத்தைக் கொண்டுள்ளது. அதேநேரத்தில், சீனாவுடன் $53.6 பில்லியன் டாலர் வர்த்தக பற்றாக்குறையைக் கொண்டுள்ளது. 2013–14 முதல் 2017–18 வரை, சீனா, இந்தியாவின் சிறந்த வர்த்தக பங்காளராக இருப்பதாக இந்தத் தரவு காட்டுகிறது.

**2. புது தில்லியில் நடைபெற்ற 2020 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பின் ஒட்டுமொத்த தரவரிசையில் இந்தியா பெற்றுள்ள இடம்?**

அ. இரண்டாவது

**ஆ. மூன்றாவது ☑**

இ. நான்காவது

ஈ. ஐந்தாவது

3

❖ ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டிகள், 2020 பிப்.18 முதல் 23 வரை புது தில்லியின் இந்திரா காந்தி அரங்கில் உள்ள KD ஜாதவ் உட்புற மைதானத்தில் நடைபெற்றது. கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக, சீனா, இந்தப்போட்டிகளில் பங்கேற்பதற்கு தடைவிதிக்கப்பட்டது.

❖ இந்தத்தொடரில் ஜப்பான், ஈரான், இந்தியா மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகள் முறையே முதல் 4 இடங்களைப் பெற்றன. ஜப்பான் 8 தங்கம் உட்பட மொத்தம் 16 பதக்கங்களை வென்றது. இந்தியா, 5 தங்கம் உட்பட மொத்தம் 20 பதக்கங்களை வென்றது.

**3.அண்மையில், சர்வதேச நீதித்துறை மாநாட்டை நடத்திய நகரம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. போபால்

இ. மும்பை

ஈ. சண்டிகர்




❖ இரு நாள் நீடித்த சர்வதேச நீதி மாநாடு–2020, புது தில்லியில் அமைந்துள்ள உச்சநீதிமன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. "நீதித்துறையும் மாறிவரும் உலகமும் – Judiciary and the Changing World" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

**4. PM–KISAN திட்டத்தின்கீழ் நிதியுதவி தகுதி பெறுவதற்கு, அதிகபட்ச நிலம் வைத்திருக்கும் வரம்பு என்ன?**

அ. 1 ஹெக்டேர்

ஆ. 2 ஹெக்டேர்

இ. 3 ஹெக்டேர்

**ஈ. வரம்பு இல்லை ☑**



❖ கடந்த 24 பிப்ரவரி 2019 அன்று PM–கிசான் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம், நாடு முழுவதும் உள்ள அனைத்து நில உரிமையாளர்களின் குடும்பங்களுக்கும் வருமான ஆதரவை வழங்குகிறது. மேலும், விவசாயம் மற்றும் குடும்பத்தேவைகள் தொடர்பான செலவுகளை பூர்த்திசெய்ய அவர்களுக்கு உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ், 3 தவணைகளில் ஆண்டுக்கு ₹6000 நிதி நேரடியாக விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

❖ இந்தத்திட்டம், தொடக்கத்தில், நாடு முழுவதுமுள்ள, இரண்டு ஹெக்டேர் நிலம் வரை வைத்திருந்த அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளின் குடும்பங்களுக்கும் வருமான ஆதரவை வழங்கியது. பின்னர் அதன் வரம்பு, நாட்டின் அனைத்து விவசாய குடும்பங்களுக்கும் அவர்களின் நிலங்களின் அளவைப் பொருட்படுத்தாமல் விரிவுபடுத்தப்பட்டது.

**5.அண்மையில் அமைக்கப்பட்ட சஞ்சீவ் பூரி நிபுணர் குழு, எந்தக் களத்தை ஆராய்கிறது?**

அ. அமைப்புசாரா துறை

**ஆ. பண்ணை ஏற்றுமதிகள் ☑**

இ. உற்பத்தி தொழில்கள்

ஈ. சேவைத்துறை



❖ 15ஆவது நிதி ஆணையம் விவசாய ஏற்றுமதியை ஆராய்வதற்காக ஓர் உயர்மட்ட வல்லுநர் குழுவை நிறுவியுள்ளது. இக்குழு ITC தலைவர் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது. இக்குழு தனது அறிக்கையை 3 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கவுள்ளது. விவசாய ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறியும் நோக்கில் சஞ்சீவ் பூரி வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**6.அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட, *C. gretathunbergae* என்பது ______?**



அ. மீன்

ஆ. பாம்பு

**இ. நத்தை ☑**

ஈ. தவளை

❖ சுவீட காலநிலை ஆர்வலர் கிரெட்டா துன்பெர்க்கின் பெயரை, புருனேயில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதியவகை நில நத்தைக்கு நெதர்லாந்தில் உள்ள அறிவியலாளர்கள் வழங்கியுள்ளனர். ***Craspedotropis gretathunbergae*** என்பது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட அந்நிலநத்தைக்கான பெயராக வழங்கப்பட்டுள்ளது. வறட்சி, வனச்சீரழிவு மற்றும் வெப்பநிலை மாற்றம் ஆகியவற்றுக்கு உணர்திறன் கொண்டவை இந்நத்தைகள். இது, 'Caenogastropods' எனப்படும் நத்தைகள் குடும்பத்தைச் சார்ந்தவையாகும்.

**7.அண்மையில், 'தாய் மங்கூர்' மீன் வளர்ப்பு மையங்களை அழிப்பதற்கு உத்தரவிட்ட மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. குஜராத்

ஈ. கோவா

❖ நன்னீர் மங்கூர் போன்ற தோற்றத்தைக்கொண்ட தாய்மங்கூர் மீன், மாநிலத்தில் மிகவும் சுகாதாரமற்ற நிலையில் வளர்க்கப்படுகிறது. இதன் நுகர்வின் காரணமாக மக்களுக்கு நோய் ஏற்படுகிறது. எனவே, தாய்மங்கூர் மீன்களின் இனப்பெருக்க மையங்களை அழிப்பதற்கு மகாராஷ்டிரா மாநில அரசு சிறப்பு முயற்சியை மேற்கொண்டுள்ளது. மீன் விற்பனைக்கு தடைவிதிக்க, மாநில மீன்வளத்துறை தலைவர் உத்தரவிட்டுள்ளார். இதற்கு முன்னர், கடந்த 2000$_{\text{ஆம்}}$ ஆண்டில் இவ்வகை மீனினங்களை விற்பனை செய்வதற்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

**8.எந்த மாநில அரசாங்கத்தால், NRI சபா தன்னார்வ தொண்டு நிறுவனம் கட்டுப்படுத்தப்படுகிறது?**

அ. இராஜஸ்தான்

ஆ. ஹரியானா

**இ. பஞ்சாப் ☑**

ஈ. உத்தரபிரதேசம்

❖ 5 ஆண்டு இடைவெளிக்குப்பிறகு, பஞ்சாப் NRI சபா தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. NRI சபா உறுப்பினர்கள் மட்டுமே இந்தத்தேர்தலில் வாக்களிக்க முடியும். NRI சபா என்பது பஞ்சாப் மாநில அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாகும். எந்தவொரு NRI'உம், ₹10,500 கட்டணஞ்செலுத்துவதன்மூலம் இதன் உறுப்பினராகலாம். இந்த அமைப்பில், சுமார் 23,000 உறுப்பினர்கள் உள்ளனர்.

- NRI சபா உறுப்பினர்களுக்கு மட்டுமே இந்தத் தேர்தலில் போட்டியிட உரிமையுண்டு. வாக்களிப்பில் பங்கேற்பதற்கும் உறுப்பினர்களுக்கு மட்டுமே உரிமையுண்டு. NRI சபா, கடந்த 1998இல், சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டது. NRI சபாவின் தலைவருக்கு எந்தச் சட்ட அதிகாரமும் கிடையாது.

- சபையின் அலுவலர்களுக்கும் சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை. பல்வேறு நாடுகளின் தூதர்களுடன் NRI'கள் தொடர்பான சிக்கல்களை எடுத்துக்கொள்வதே அவர்களின் செயல்பாடு. NRI'கள் தொடர்பான அரசாங்கப்பணிகளை விரைவுபடுத்துவதற்கும் இவர்கள் அழுத்தம் தருவார்கள்.

**9. "JavaScript Sniffers" என்ற சொல், பின்வரும் எதனுடன் தொடர்புடையது?**

அ. அங்கீகார மென்பொருள்

**ஆ. தீம்பொருள் ☑**

இ. குறியாக்க மென்பொருள்

ஈ. தீயரண்




- இருண்ட வலையில் (Dark Web) விற்கப்படும் வரவு அட்டை குறித்த தகவல்களில், சுமார் 98%, இந்திய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்டதாக சிங்கப்பூரைச்சேர்ந்த இணையப் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், JS ஸ்னிஃபர்களின் பயன்பாட்டை இது எடுத்துக்காட்டுகிறது.

- JS ஸ்னிபர்கள் அல்லது ஜாவாஸ்கிரிப்ட் ஸ்னிபர்கள் என்பது சிறப்பு தீம்பொருளாகும்; அவை, இணைய குற்றவாளிகளால் முக்கியமான வரவு அட்டைத் தகவல்களைத் திருடப்பயன்படுகின்றன. சிங்கப்பூரைச் சேர்ந்த குரூப் IB'இன் அண்மைய அறிக்கை, இணைய குற்றவாளிகளால் இந்த மென்பொருட்களின் வளர்ந்துவரும் பயன்பாட்டை எடுத்துக்கூறுகிறது. திருடப்பட்ட தகவல்கள் பின்னர் இருண்டவலையில் விற்கப்படுகின்றன.

**10.எத்னோலோக் (Ethnologue) என்றால் என்ன?**

**அ. மொழிகளின் தரவுத்தளம் ☑**

ஆ. பாரம்பரிய கட்டடங்களின் தரவுத்தளம்

இ. உள்ளூர் சுங்கங்களின் தரவுத்தளம்

ஈ. பழங்குடிகளின் தரவுத்தளம்




- பிப்ரவரி.21 அன்று கொண்டாடப்படும் சர்வதேச தாய்மொழி நாளில் உலகின் மிகப்பெரிய மொழி தரவுத் தளமான 'எத்னோலோக்'இன் 23ஆவது பதிப்பு வெளியிடப்பட்டது. 'எத்னோலோக்: உலகின் மொழிகள்' என்பது வருடாந்திர வெளியீடாகும். இது, உலக மொழிகளின் பெரும் தரவுத்தளமாக செயல்படுகிறது. மொழியியலாளர்களால் ஆராய்ச்சிக்காகவும், மாணவர்களாலும் இது பயன்படுத்தப்படுகிறது.

- அமெரிக்காவைச் சார்ந்த SIL இன்டர்நேஷனல் என்ற இலாப நோக்கற்ற அமைப்பால், 'எத்னோலோக்' வெளியிடப்படுகிறது. இது, கடந்த 1951ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. உலக மொழிகளை ஆவணப்படுத்துவதும், கல்வியறிவை மேம்படுத்துவதுமே இந்த வெளியீட்டின் முக்கிய நோக்கமாகும்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. 2020 ஏப்ரல் முதல் நடைமுறைக்கு வரவுள்ள நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 2019, "வர்க்கச் சார்பு தனியர் வழக்குகள்" தொடர்பான ஏற்பாடுகளை செய்கிறது. இந்த வழக்கை, எதற்கு பயன்படுத்தலாம்?**

அ. ஒரே தயாரிப்பின் பல்வேறு தயாரிப்பாளர்களுக்கு எதிராக வழக்கு தொடர

**ஆ. தவறான தயாரிப்புகளின் முழு தொகுப்பையும் திரும்பப்பெறுதற்கு ☑**

இ. தவறான தயாரிப்புகளின் தயாரிப்பாளர்களின் முழு நிர்வாக குழுவுக்கு எதிராக வழக்கு தொடர

ஈ. நுகர்வோரின் முழு குழுவும் உரிமைகோரல்

- 2020 ஏப்ரலில், இந்தியாவில், நுகர்வோரால், 'வர்க்கச் சார்பு தனியர் வழக்கு'களைத் (class action law suits) தொடர முடியும். மேலும், புதிய நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், 2019இன்கீழ், மத்தியஸ்தத்தையும் தேர்வுசெய்ய முடியும்; இது, குறைபாடுள்ள தயாரிப்புகள் அல்லது மோசமான சேவைகளால் ஏற்படும் சேதங்களுக்கான உரிமைகோரல்களுக்கு சட்டபூர்வமான கடிவாளத்தை வழங்குகிறது.
- 'வர்க்கச் சார்பு வழக்கு' என்பது ஒரு சட்டபூர்வமான கருவியாகும். இது, ஒரு குறைபாடுள்ள தயாரிப்பு அல்லது சேவை குறித்த தனிப்பட்ட ஒரு நபரின் புகாரை, அதேபோன்ற சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட பிற நுகர்வோரின் வழக்காகவும் கருதுவதற்கு உதவுகிறது. ஒரேயொரு புகாரின் அடிப்படையில், குறைபாடுள்ள பொருள் இடம்பெற்றிருந்த முழு தொகுப்பையும் (entire batch) திரும்பப்பெறுவதற்கு இந்த 'வர்க்கச் சார்பு வழக்கை' பயன்படுத்தப்படலாம்.

**2.2022ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகளிலிருந்து துப்பாக்கிச்சூடு & வில்வித்தை தொடக்கத்தில் கைவிடப்பட்ட பின்னர், இந்த இரு விளையாட்டுகளும் சேர்க்கப்படும் என்றும் 2022ஆம் ஆண்டு பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் ஒருபகுதியாக இந்தியாவில் இவை ஏற்பாடு செய்யப்படும் என்றும் அண்மையில் முடிவுசெய்யப்பட்டது. இந்த இரண்டு விளையாட்டுகளும், இந்தியாவில், எங்கு நடைபெறவுள்ளன?**

அ. புது தில்லி

**ஆ. சண்டிகர் ☑**

இ. பெங்களூரு

ஈ. ஹைதராபாத்

- காமன்வெல்த் விளையாட்டு–2022 போட்டிகள் இந்தியாவின் சண்டிகர், இங்கிலாந்தின் பர்மிங்காம் என இரண்டு இடங்களில் நடக்கவுள்ளது. இங்கிலாந்தில் வரும் 2022 ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 7 வரை காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் துப்பாக்கிசுடுதல் போட்டி சேர்க்கப்படவில்லை. வில்வித்தையும் விருப்ப போட்டியாக மாற்றப்பட்டது. இவ்விரு விளையாட்டுகளில் சமீபகாலமாக ஆதிக்கம் செலுத்தி வரும் இந்தியா, இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, விலகுவோம் என எச்சரித்தது. இதனிடையே எதிர்வரும் 2022 ஜனவரியில், இந்தியாவின் சண்டிகரில் காமன்வெல்த் துப்பாக்கிசுடுதல், வில்வித்தை போட்டிகளை நடத்த அனுமதி கிடைத்தது.

- தற்போது, சண்டிகர் விளையாட்டில் வெல்லும் பதக்கங்கள், காமன்வெல்த் விளையாட்டில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என காமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகள் கூட்டமைப்பு தெரிவித்தது. இதன் படி, பர்மிங்காம் போட்டி முடிந்த ஒரு வாரத்தில், சண்டிகரில் வென்ற பதக்கங்களும் அந்தந்த நாடுகளில் பதக்க பட்டியலில் சேர்க்கப்படவுள்ளன.

**3.இந்தியாவின் எந்த நகரத்தில், 'மத்திய விஸ்டா' திட்டம் வருகிறது?**

அ. புது தில்லி ☑

ஆ. போபால்

இ. மும்பை

ஈ. சண்டிகர்



- "மத்திய விஸ்டா" என்பது ஒரு புதிய நாடாளுமன்ற கட்டடம் நிர்மாணித்தல், அனைத்து நடுவண் அமைச்சகங்களையும் நெருக்கமாகக் கொண்டுவருதல் மற்றும் "மத்திய விஸ்டா"விலும் அதைச் சுற்றியுள்ள தற்போதைய பாரம்பரிய கட்டமைப்புகளை மறுவடிவமைத்தல் ஆகியவை அடங்கிய ஒரு இலட்சியத்திட்டமாகும். இந்தத் திட்டத்தின்கீழ், எட்டு புதிய அரசு அலுவலக கட்டிடங்கள், ஒரு புதிய நாடாளுமன்ற மாளிகை மற்றும் தெற்குப்புற தொகுதிக்கு அருகே பிரதமர் மற்றும் குடியரசுத்துணைத் தலைவர் ஆகியோரின் இல்லம் அமைக்கப்படும்.

**4.பின்வரும் ஆப்பிரிக்க நாடுகளுள், அண்மையில், FATFஇன் சாம்பல் பட்டியலில் சேர்க்கப்பட்ட நாடு எது?**

அ. காபோன்

ஆ. அல்ஜீரியா

இ. கென்யா

ஈ. மொரீஷியஸ் ☑

- நீண்ட காலமாக வரி ஏமாற்றுகளின் புகலிடமாகக் கருதப்படும் மொரீஷியஸ், FATFஇன், "சாம்பல் பட்டியலில்" சேர்க்கப்பட்டுள்ளது. இது, மொரீஷியஸிடம் FPIஇன் கதி குறித்து கேள்வி எழுப்பியுள்ளது.

**5.ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களுக்காக, இழப்பீடு அடிப்படையிலான நலவாழ்வு காப்பீட்டு தயாரிப்புகளில் உள்ள சிக்கல்களை ஆராயும் IRDA குழுவுக்கு, தலைமைதாங்கவுள்ளவர் யார்?**

அ. டி ராஜ்குமார்

ஆ. பிரவீன்குமார் பர்வார்

இ. பிரதோஷ்குமார் ராத்

ஈ. M R குமார் ☑



- ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களால் இழப்பீடு அடிப்படையிலான நலவாழ்வு காப்பீடுகளை வழங்க முடியுமா? என்பதை ஆராய்வதற்காக காப்பீடு ஒழுங்காற்றுநரான IRDA, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் தலைவர் M R குமார் தலைமையில், ஒன்பது பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.

**6.முதன்முறையாக, பன்னாட்டுப் பத்திர சந்தையில் மசாலா பத்திரங்களை வெளியிட்ட நாடுகடந்த வங்கி (Supranational Bank) எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

இ. ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

ஈ. ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி

❖ முதன்முறையாக, ஆசிய வளர்ச்சி வங்கி, ₹850 கோடி மதிப்பிலான தனது 10 ஆண்டுகால மசாலா பத்திரத்தை GIFT நகரத்தில் உள்ள இந்திய சர்வதேச பரிமாற்றகத்தின் பன்னாட்டுப் பத்திர சந்தையில் வெளியிட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் மசாலா பத்திரங்கள், லக்சம்பர்க் மற்றும் இந்தியா INX ஆகிய இரண்டிலும் வெளியிடப்பட்டுள்ளன.

**7. BIMSTEC குழுவில் உள்ள தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன?**

அ. 5

ஆ. 6

**இ. 7 ☑**

ஈ. 8

❖ வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு (Bay of Bengal Initiative for Multi Sectoral Technical and Economic Cooperation – **BIMSTEC**) என்பது தெற்கு ஆசியாவிலும், தென்கிழக்காசியாவிலும் அமைந்துள்ள ஏழு நாடுகள் அடங்கிய ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகள் – வங்கதேசம், இந்தியா, மியன்மர், இலங்கை, தாய்லாந்து, நேபாளம், பூட்டான் ஆகும். இவைகள் அனைத்தும் வங்காள விரிகுடாவைச் சுற்றியுள்ள நாடுகளாகும்.

❖ வங்காள விரிகுடா கடற்கரையிலமைந்திருக்கும் நாடுகளிடையே தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவை மேம்படுத்துவதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

**8.எந்த ஆண்டில், BIMSTEC நாடுகளின் உறுப்பினர்களிடையே, 'BIMSTEC கட்டமைப்பு இடையிணைப்பு – BIMSTEC Grid Interconnection"ஐ நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது?**

அ. 2016

ஆ. 2017

**இ. 2018 ☑**

ஈ. 2019



❖ அண்மையில், BIMSTEC மற்றும் ஆற்றல் ஒருங்கிணைப்புக்கான தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு ஆகியவை இணைந்து, 'BIMSTEC பிராந்தியத்தில் ஆற்றல் துறையில் ஒத்துழைப்பை அதிகரித்தல்' என்ற தலைப்பில் மாநாட்டை ஏற்பாடு செய்தன. BIMSTEC உறுப்பினர்கள், 3000 கி.மீ நீள BIMSTEC

மின் கட்டமைப்பை, 'BIMSTEC Grid Interconnection' என்ற பெயரில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளனர். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், கடந்த 2018ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

**9.முன்மொழியப்பட்டுள்ள, 'சந்துஷ்த் செயலி', எந்தத் திட்டத்தின் பயனாளிகளுக்கானது?**

அ. தேசிய சேமிப்பு சான்றிதழ் திட்டம்

**ஆ. இந்திய தொழிலாளர் அரசு காப்பீட்டுத் திட்டம் (ESI) ☑**

இ. P M கிசான்

ஈ. மேற்கூறிய எதுவும் இல்லை

❖ இந்திய தொழிலாளர் அரசு காப்பீட்டுத் திட்டத்தின் (ESI) பயனாளிகளின் சிக்கல்களுக்கு தீர்வுகாணும் நோக்கில், மத்திய தொழிலாளர் அமைச்சகம், விரைவில், 'சந்துஷ்த்' என்ற அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தவுள்ளது. இது குறித்த தகவல், இந்திய தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் (ESIC) நிறுவன நாள் கொண்டாட்ட விழாவின்போது தெரிவிக்கப்பட்டது.


**10.ஆன்டிஹைட்ரஜன், ______ஆல் ஆனது?**

அ. பாசிட்ரான் மற்றும் புரோட்டான்

ஆ. நியூட்ரான் மற்றும் புரோட்டான்

**இ. பாசிட்ரான் மற்றும் ஆண்டிபுரோட்டான் ☑**

ஈ. நியூட்ரினோ மற்றும் நியூட்ரான்




❖ எதிர் நீரகம் (Anti–Hydrogen) என்பது ஹைட்ரஜனின் எதிர்ப்பொருள் ஆகும். பொதுவான ஹைட்ரஜன் அணு ஓர் எலக்ட்ரான் மற்றும் புரோட்டானால் ஆனது. ஆனால், இந்த ஆன்டிஹைட்ரஜன் அணுவானது ஒரு பாசிட்ரான் மற்றும் ஆண்டிபுரோட்டானால் ஆனது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

### ❖ 2019ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி விருதுகள்:-

- 'சூல்' என்ற நாவலுக்காக அதனை எழுதிய எழுத்தாளர் சோ.தர்மனுக்கு, 'தமிழ் மொழிக்கான சாகித்திய அகாதமி விருது' வழங்கப்பட்டது.
- 'நிலம்பூத்து மலர்ந்த நாள்' என்ற மலையாளமொழி நாவலை தமிழ் மொழியில் சிறந்த முறையில் மொழிபெயர்ப்பு செய்ததற்காக, தமிழ் எழுத்தாளர் K V ஜெயஸ்ரீக்கு, நடுவணரசின், 2019ஆம் ஆண்டுக்கான 'சிறந்த மொழி பெயர்ப்புக்கான சாகித்திய அகாதமி விருது' வழங்கப்பட்டது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. 2020ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் அமைந்துள்ள நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

**ஆ. இந்தியா ☑**

இ. தென்னாப்பிரிக்கா

ஈ. நியூசிலாந்து




❖ அகமதாபாத்தில் (குஜராத்) அமைந்துள்ள சர்தார் படேல் மைதானம் (மோட்டேரா மைதானம் என்றும் அழைக்கப்படுகிறது), உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமும், வட கொரியாவின் ரங்கிராடோ மே டே அரங்கத்துக்குப்பிறகு உலகின் இரண்டாவது பெரிய அரங்கமுமாகும். சர்தார் படேல் மைதானத்தின் புனரமைப்புப்பணிகள், கடந்த 2016ஆம் ஆண்டில் தொடங்கியது.

❖ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், புதிதாக புதுப்பிக்கப்பட்ட இந்த மைதானத்தில், பிரதமர் நரேந்திர மோடியுடனான, "நமஸ்தே டிரம்ப்" நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

**2. இந்திய கடலோர காவல்படை மற்றும் சுங்கப்பணியாளர்களுக்காக, சென்னையில், 'கப்பல் தேடல் நுட்பம்' குறித்த பயிற்சி வகுப்பை ஏற்பாடு செய்த நாடு எது?**



அ. ஜப்பான்

**ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. ஓமான்

ஈ. கத்தார்

❖ ஆஸ்திரேலிய எல்லைப்படையின் நடமாடும் பயிற்சிக்குழுவானது தமிழ்நாட்டின் காவல்துறை, இந்திய கடலோர காவற்படை, சுங்கம் மற்றும் கடலோர பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கான, 'கப்பல் தேடல் நுட்பம் – Vessel Search Technique' குறித்த பயிற்சி வகுப்பை நடத்தியது. இந்திய கடலோர காவற்படை, இப்பயிற்சியை, சென்னையில், ஆஸ்திரேலியாவின் எல்லைப்படையுடன் இணைந்து ஏற்பாடுசெய்தது.

**3. ICAR ஏற்பாடு செய்த 4 நாள், "வாழை குறித்த சர்வதேச மாநாட்டை" நடத்திய மாநகரம் எது?**

**அ. திருச்சிராப்பள்ளி ☑**

ஆ. காந்தி நகர்

இ. கொச்சி

ஈ. திருவனந்தபுரம்



❖ பிப்.22–25 காலப்பகுதியில், பயோவர்சிட்டி இன்டர்நேஷனலுடன் இணைந்து, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின்கீழியங்கும் (ICAR), தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (NRCB) 4 நாள், 'வாழை குறித்த சர்வதேச மாநாட்டை' அண்மையில் ஏற்பாடு செய்தது. ICARஇன் தேசிய வாழை ஆராய்ச்சி மையம், தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ளது.

❖ திருச்சிராப்பள்ளியில், "Innovations in Sustainable Production and Value Chain Management in Banana" என்ற கருப்பொருளில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

**4. THDC இந்தியா மற்றும் வடகிழக்கு மின்திறன் நிறுவனம் (NEEPCO) ஆகியவற்றிலுள்ள அரசின் முழு பங்குகளையும் எந்த இந்திய பொதுத்துறை நிறுவனம் பெறவுள்ளது?**

**அ. NTPC நிறுவனம் ☑**

ஆ. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

இ. பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

ஈ. NHPC நிறுவனம்

❖ இந்திய போட்டி ஆணையம் (CCI) அண்மையில், மகாரத்னா பொதுத்துறை நிறுவனமான – NTPC நிறுவனம், THDC இந்தியா மற்றும் வடகிழக்கு மின்திறன் நிறுவனம் (NEEPCO) ஆகியவற்றில் உள்ள அரசாங்கத்தின் முழு பங்குகளையும் வாங்க அனுமதித்தது. NEEPCO வழங்கிய & செலுத்திய பங்கு மூலதனத்தில் 100 சதவீதத்தையும், THDC இந்தியாவில் 74.5 சதவீதத்தையும் NTPC கையகப்படுத்தும். மீதமுள்ளவைற்றை உத்தரபிரதேச மாநில அரசு கையகப்படுத்தும்.

**5.அண்மையில், எந்த மத்திய அமைச்சகம் / அமைப்பால், '5G ஹேக்கத்தான்' தொடங்கப்பட்டது?**




அ. NITI ஆயோக்

ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

**இ. தகவல் தொடர்பு அமைச்சகம் ☑**

ஈ. மனித வள மற்றும் மேம்பாட்டு அமைச்சகம்

❖ தகவல் தொடர்பு அமைச்சகத்தின் தொலைத்தொடர்புத்துறை அண்மையில் அரசு மற்றும் தொழிற்துறை பங்குதாரர்களுடன் இணைந்து, '5G ஹேக்கத்தான்' என்றவொன்றை அறிமுகப்படுத்தியது. புதிய யோசனைகளை சாத்தியமிக்க ஐந்தாம் தலைமுறை தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளாக மாற்றுவதை இந்த, '5G ஹேக்கத்தான்' நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து மாணவர்கள், துளிர் நிறுவனங்கள், சிறு & நடுத்தர நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் கூட இதில் பங்கேற்கலாம்.

**6. 2020ஆம் ஆண்டில் பார்ச்சூன் நிறுவனத்தின், 'பணிபுரிவதற்கு சிறந்த 20 முன்னணி நிறுவனங்கள்' பட்டியலில் இடம்பெற்ற ஒரே இந்திய நிறுவனம் எது?**

அ. இன்போசிஸ்

**ஆ. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ☑**

இ. சோஹோ

ஈ. சோமாடோ

❖ டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS), 2020ஆம் ஆண்டில் பார்ச்சூன் நிறுவனத்தின், 'பணிபுரிவதற்கு சிறந்த முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலின், முதல்

இருபது இடங்களுள் இடம்பெறும் ஒரே இந்திய நிறுவனம் இதுவாகும். சுமார் 33,000 ஊழியர்களிடம் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

**7.அண்மையில் எந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில், 'Red Throated Thrush மற்றும் Plumbeous Water Redstart' ஆகிய இவ்விரு பறவையினங்களும் தென்பட்டன?**



அ. அருணாச்சல பிரதேசம்

ஆ. உத்தரகண்ட்

**இ. லடாக் ☑**

ஈ. இலட்சத்தீவுகள்

❖ கிரேட் பேக்யார்ட் பறவை கணக்கெடுப்புப்பணியானது, லடாக்கின் வனவுயிரி பாதுகாப்பு & பறவைகள் சங்கத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இந்தப்பயிற்சியின்போது, லடாக் பிராந்தியத்தில், முதல் முறையாக, 'Red Throated Thrush மற்றும் Plumbeous Water Redstart' என்ற இரண்டு புதிய பறவை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. லடாக்கில் மொத்தம் 87 வகையான பறவையினங்களை பறவை மற்றும் வனவிலங்கு வல்லுநர்கள் கணக்கிட்டு பதிவுசெய்துள்ளனர்.

**8. "மைக்ரோசாப்ட் ஃபியூச்சர் டிகோடட் – CEO உச்சிமாநாடு" நடைபெற்ற நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. மும்பை ☑**




இ. சென்னை

ஈ. குருகிராம்

❖ பிப்.24 அன்று மும்பையில் மைக்ரோசாப்ட் தனது, "Microsoft Future Decoded – CEO" உச்சிமாநாட்டை நடத்தியது. இந்த உச்சிமாநாட்டில் பல்வேறு துறைகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். இதில், மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைமைச்செயல் அதிகாரி சத்யா நாதெல்லா உரையாற்றினார். பிப்.25 அன்று பெங்களூருவில் நடைபெற்ற, "Microsoft Future Decoded – தொழில்நுட்பம்" உச்சிமாநாட்டிலும் நாதெல்லா கலந்துகொண்டார்.

**9.அபை குமார் சிங், எந்த இந்திய பொதுத்துறை நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ. NTPC நிறுவனம்

ஆ. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

இ. பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

**ஈ. NHPC நிறுவனம் ☑**

❖ அபை குமார் சிங், அண்மையில், இந்திய பொதுத்துறை நிறுவனமான NHPC நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். 2020 பிப்ரவரி 24 அன்று பொறுப்பேற்ற அவர், அவரின் பணிமூப்பு காலம் வரை இந்தப்பதவியில் பணியாற்றுவார்.

- தலைவர் & மேலாண்மை இயக்குநர் பதவியை கூடுதல் பொறுப்பாக வகித்துவந்த இரதீஷ்குமாருக்கு பதிலாக அபை குமார் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

**10.பிப்ரவரி 24 அன்று தொடங்கப்பட்ட எந்த நலத்திட்டம் தனது முதலாம் ஆண்டை நிறைவுசெய்துள்ளது?**

அ. பிரதம மந்திரி கிசான் மான்–தன் யோஜனா (PM – KMY)

**ஆ. பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி (P M – KISAN) ☑**

இ. பிரதம மந்திரி ஸ்ரம் யோகி மான்–தன் (PM – SYM)

ஈ. பிரதம மந்திரி லகு வியாபரி மான்–தன் யோஜனா



- பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டம் (PM–KISAN) என்ற பெயரிலான மத்திய அரசின் புதிய திட்டம் தொடங்கப்பட்டு 24.02.2020 உடன் ஓராண்டு நிறைவடைகிறது. வேளாண்மை மற்றும் அது சார்ந்த செயல்களுக்கும், குடும்பத்தேவைகளுக்குமான செலவுகளை கவனிக்க நிலம் வைத்துள்ள வேளாண் பெருமக்களுக்கு வருவாய் ஆதரவு அளிப்பதற்காக நாடு முழுவதற்குமான இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

- அதிக வருவாயுள்ள பிரிவினரை நீக்கி, மற்ற விவசாயிகளுக்கு இந்தத்திட்டத்தின்கீழ், 4 மாதங்களுக்கு ஒருமுறை ₹2,000 என ஆண்டுக்கு ₹6,000 வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. தொடக்கத்தில் விவசாயத்துக்குத் தகுதியான இரண்டு ஹெக்டேர் வரை நிலம் வைத்துள்ள சிறு, குறு விவசாயிகள் அனைவருக்குமானதாக இத்திட்டம் இருந்தது. பின்னர், இதன் தேவையை உணர்ந்து, நிலத்தின் அளவை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் நாடு முழுவதும் உள்ள அனைத்து வேளாண் குடும்பங்களும் பயனடையும் வகையில் 01.06.2019 முதல் விரிவாக்கம் செய்யப்பட்டது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.இறால் உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக, சரக்குப் போக்குவரத்து சேவைகளைத் தொடங்கியுள்ள வான் போக்குவரத்து நிறுவனம் எது?**

அ. அலையன்ஸ் ஏர்

ஆ. இண்டிகோ

இ. ஸ்பைஸ்ஜெட் ☑

ஈ. விஸ்தாரா

- இறால் குஞ்சுகளைக்கொண்டு செல்ல உதவுவதற்காக, முன்னணி இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனமான ஸ்பைஸ்ஜெட், சென்னை மற்றும் விசாகப்பட்டினத்திலிருந்து சூரத் & கொல்கத்தாவுக்கு சரக்குப் போக்குவரத்து சேவைகளை அறிமுகப்படுத்தியது.
- 'SpiceXpress' எனப்படும் ஸ்பைஸ்ஜெட்டின் வான்வழி விமானப் போக்குவரத்து பிரிவு, 21 டன் சுமக்கும் திறன்கொண்ட போயிங் 737 வானூர்தியை இதற்குப் பயன்படுத்தும். முன்மொழியப்பட்ட வழித்தடங்க –ளில் இதுபோன்ற சேவைகள் தொடங்கப்படுவது இதுவே முதன்முறையாகும். சமீபத்திய பட்ஜெட்டில், இதேபோன்ற சேவை, 'கிருஷி உதான்' என்று அறிவிக்கப்பட்டது.

**2.சமீபத்தில் தனது பதவிவிலகலைச் சமர்ப்பித்த பாப் இகர், பதினைந்து ஆண்டுகளாக எந்தப் பன்னாட்டு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இருந்தார்?**

அ. வால்ட் டிஸ்னி நிறுவனம் ☑

ஆ. நெட்பிளிக்ஸ்

இ. வார்னர் பிரதர்ஸ்

ஈ. பிக்ஸார்

- பொதுவாக டிஸ்னி என்று அழைக்கப்படும் வால்ட் டிஸ்னி நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி பாப் இகர், அண்மையில் தனது பதவிவிலகலைச் சமர்ப்பித்தார். கடந்த 2005ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவைத் தளமாகக்கொண்ட பன்னாட்டு வெகுஜன ஊடக நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக அவர் பணியாற்றினார்.
- அவரது தலைமையின்கீழ், டிஸ்னி நிறுவனம் ஸ்டார் வார்ஸ், மார்வெல் & ஃபாக்ஸின் பொழுதுபோக்கு வணிகங்களை வாங்கியது. இகருக்குப் பதிலாக அடுத்த தலைமைச் செயல் அதிகாரியாக பாப் சேபெக் நியமிக்கப்படவுள்ளார். 2021 டிசம்பர் 31 வரை இகர் நிர்வாகத்தலைவராக பணியாற்றுவார்.

**3. 2020ஆம் ஆண்டு நிலவரப்படி, காப்பீட்டு இடைத்தரகர்களில், அனுமதிக்கப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு (FDI) வரம்பு என்ன?**

அ. 0% ஆ. 25%

இ. 49% ஈ. 100% ☑

100%

- ❖ தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது சமீபத்தில் தானியங்கி ஒப்புதல் வழிமுறையின்கீழ் காப்பீட்டு இடைத்தரகர்களில் 100% அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படுவதாக அறிவித்தது. இதற்கு முன்னர், காப்பீட்டு இடைத்தரகர்கள் உட்பட மொத்த காப்பீட்டுத்துறையிலும் 49% அளவுக்கு அந்நிய நேரடி முதலீட்டை அந்நிய நேரடி முதலீட்டுக்கொள்கை அனுமதித்திருந்தது.

- ❖ இடைநிலை சேவைகள் என்பது காப்பீட்டு தரகர்கள், மறுகாப்பீட்டு தரகர்கள், காப்பீட்டு ஆலோசகர்கள், மூன்றாம் தரப்பு நிர்வாகிகள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**4.மார்ச் 5, 2020 அன்று ISROஆல் ஏவ திட்டமிடப்பட்டுள்ள புதிய செயற்கைக்கோளின் பெயரென்ன?**

அ. GISAT-1 ☑

ஆ. GISAT-3

இ. GISAT-7

ஈ. GISAT-11



- ❖ புவி படமாக்கல் செயற்கைக்கோளான GSAT-1, வரும் மார்ச் 5ஆம் தேதி ஏவப்படும் என்று இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) அறிவித்துள்ளது. ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து, Geosynchronous Satellite Launch Vehicle (GSLV-F10)இன்மூலம் இந்தச் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படும். 2275 கிலோ எடைகொண்ட உலகத்தரம் வாய்ந்த இந்தப் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள், புவிசார் ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படும்.

**5.அண்மையில் காலமான ஹோஸ்னி முபாரக், எந்த நாட்டின் முன்னாள் அதிபராக இருந்தார்?**

அ. கிரீஸ்

**ஆ. எகிப்து ☑**

இ. பிரான்ஸ்

ஈ. லிபியா



- ❖ எகிப்தின் முன்னாள் அதிபர் முகமது ஹோஸ்னி முபாரக் (91), சமீபத்தில் காலமானார். அவர் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் எகிப்தின் அதிபராக இருந்தார். எகிப்து விமானப்படையின் முன்னாள் தலைவராகவும் அவர் இருந்தார். கடந்த 1981ஆம் ஆண்டில், அவர், எகிப்தின் துணை அதிபரானபின், அவருக்கு முன் அதிபராக இருந்த அன்வர் சதாத் படுகொலை செய்யப்பட்டதற்கு பின்னர் அவர் ஆட்சியைப்பிடித்தார். பெரும் போராட்டங்களுக்குப்பிறகு, முபாரக், 2011'இல் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

**6.இந்திய கொள்கலன் கார்ப்பரேஷன் (Concor) மற்றும் RZD லாஜிஸ்டிக்ஸ் JSC (இரஷ்ய இரயில்வே) ஆகியவற்றுக்கு இடையே கையெழுத்தான புதிய ஒப்பந்தத்தின்படி, எந்நாட்டின் வழியாக சரக்குகள் கொண்டுசெல்லப்படவுள்ளன?**

அ. பாகிஸ்தான் ஆ. ஆப்கானிஸ்தான்

**இ. ஈரான் ☑** ஈ. உஸ்பெகிஸ்தான்



❖ இந்திய கொள்கலன் கார்ப்பரேஷன் (Concor) மற்றும் RZD லாஜிஸ்டிக்ஸ் JSC (இரஷ்ய இரயில்வே) ஆகியவை, அண்மையில் விரைப்பட்டியல் ஒன்றைப் பயன்படுத்தி இந்தியாவுக்கும் இரஷ்யாவுக்கும் இடையில் சரக்குகளைக்கொண்டுசெல்வதற்கான சேவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ஈரான் வழியாக செல்லும் சர்வதேச வடதெற்கு போக்குவரத்து வழித்தடத்தை பயன்படுத்தி இருநாடுகளுக்கும் இடையில், கொள்கலன்கள் செல்லும். இவ்வழித்தடம், அஜர்பைஜான் வழியாகவும் செல்கிறது.

**7.இந்திய வம்சாவளி அமைச்சரான சுயெல்லா பிராவர்மேன், அண்மையில், எந்த நாட்டின் தலைமை வழக்குரைஞராக பதவியேற்றார்?**



அ. நியூசிலாந்து

ஆ. பின்லாந்து

**இ. பிரிட்டன் ☑**

ஈ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

❖ இந்திய வம்சாவளி அமைச்சரான சுயெல்லா பிராவர்மேன், அண்மையில், பிரிட்டனின் (UK) தலைமை வழக்குரைஞராக பதவியேற்றார். புதிய பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் தனது அமைச்சரவையை மாற்றியமைத்த பிறகு அவர் நியமிக்கப்பட்டார். முக்கியமான பதவியில் நியமிக்கப்பட்ட இரண்டாவது பெண்ணும், பழமைவாத கட்சி ஆட்சியில் நியமிக்கப்பட்ட முதல் பெண் தலைமை வழக்குரைஞருமாக சுயெல்லா பிராவர்மேன் உள்ளார்.

**8.நாவல் கொரோனா வைரஸை (COVID–19) அடையாளங்காண்பதற்காக முதன்முறையாக ஒரு நோயெதிர்ப்புப் பரிசோதனையை (Antibody Test) உருவாக்கியுள்ள நாடு எது?**



அ. சீனா

ஆ. அமெரிக்கா

**இ. சிங்கப்பூர் ☑**

ஈ. தென் கொரியா

❖ சிங்கப்பூரின் நலவாழ்வு அமைச்சகம் அந்நாட்டின் மருத்துவப்பள்ளியால் ஒரு நோயெதிர்ப்புப் பரிசோதனை உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. மேலும் இது, நாவல் கொரோனா வைரஸால் (COVID–19) பாதிக்கப்பட்ட இருவரை வெற்றிகரமாக இனங்கண்டுள்ளது. தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மூலக்கூறு சோதனை, வாய்வழி மாதிரிகளில் வைரஸ் மரபணு பொருளைக்கண்டறிகிறது.

❖ அதேநேரத்தில், புதிதாக உருவாக்கப்பட்ட இந்தச்சோதனை வைரஸால் பாதிக்கப்படும்போது நோய் எதிர்ப்பு மண்டலத்தால் உருவாக்கப்பட்ட நோயெதிர்ப்புப் பொருட்களைக் கண்டறிகிறது.

**9.அண்மைய, 'ஹுரூன் உலக பணக்காரர்கள் பட்டியல்–2020'இன்படி, அதிக கோடீசுவரர்களைக் கொண்ட நாடு எது?**



அ. அமெரிக்கா **ஆ. சீனா ☑**

இ. இரஷ்யா ஈ. இந்தியா

- அண்மையில் வெளியான, 'ஹுருன் உலக பணக்காரர்கள் பட்டியல் 2020'இன்படி, உலகின் அதிக கோடீசுவரர்களைக்கொண்ட நாடாக சீனா உள்ளது. இந்தப்பட்டியலில், $140 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சொத்துக்களுடன் அமேசான் நிறுவனரும் தலைமைச் செயல் அதிகாரியுமான ஜெப் பெசோஸ் முதலிடத்தில் உள்ளார். மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் மூன்றாவது இடத்திலும், $67 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சொத்துக்களுடன் ஒன்பதாவது இடத்திலும் உள்ளனர். முதல் 10 இடங்களுள் இடம்பெறும் ஒரே இந்தியரும், ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரருமாக அவருள்ளார்.

**10. 'நிர்வாகிக்கான உயர்கல்வி தலைமைத்துவ மேம்பாட்டுத்திட்டம்' என்பது எந்நடுவணமைச்சகத்தின் திட்டமாகும்?**

அ. கார்ப்பரேட் விவகார அமைச்சகம்

**ஆ. மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ☑**

இ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

ஈ. சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்ரீ ரமேஷ் போக்ரியால் நிஷாங்க், அண்மையில், 'நிர்வாகிக்கான உயர்கல்வி தலைமைத்துவ மேம்பாட்டுத்திட்டம் – Higher Education Leadership Development Programme for Administrator' என்ற திட்டத்தை தொடங்கிவைத்தார். இது, இங்கிலாந்து இந்திய கல்வி & ஆராய்ச்சித் திட்டத்தின் ஆதரவின்கீழ், பல்கலைக்கழக மானிய ஆணையம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒரு கூட்டு முயற்சியாகும். இந்திய பல்கலைக்கழகங்களில் உள்ள மூத்த மற்றும் இடைநிலை நிர்வாகிகளுக்கு பயிற்சியளிப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- சென்னையில் உள்ள நெதர்லாந்து நாட்டு தூதரகத்தின் கௌரவ தூதராக, TVS கேப்பிடல் ஃபண்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கோபால் சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் வர்த்தகம், புதிய முதலீடு, கல்வி, சுற்றுலா மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் நெதர்லாந்து – தமிழ்நாடு இடையே மேலும் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

---